# வேட்டுவக்கவுண்டர் சமூகநலச் சங்கம்

ல.கள்ளிப்பட்டி, கோபிசெட்டிபாளையம்-638 452
ஈரோடு மாவட்டம்

| M.ராஜப்பன் | K.M.கருப்பணசாமி | K.M.காளியண்ணன் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| (செல் : 94893 72067) | (செல் : 94428 19188) | (செல் : 80126 76003) |


நாள்: 24.02.2011

பெறுநர்

உயர்திரு.K.V.தங்கபாலு அவர்கள்,
தலைவர்,
தமிழ்நாடு காங்கிரஸ் குழு,
சென்னை.

உயர்திரு.ஐயா,

வணக்கம். எங்களது வேட்டுவக்கவுண்டர் சமுதாயம் கல்வி, வேலைவாய்ப்பு பொருளாதார நிலைகளில் மிகவும் பின்தங்கியுள்ளது. அரசியல் அந்தஸ்திலும் பெரிய பொறுப்புகளில் எங்களது இனத்தவர்கள் இல்லை. மற்ற சமுதாயத்தைப் போல, MP, MLA, மத்திய, மாநில அமைச்சர்கள் பதவிகளில் எங்கள் இனத்தவர்கள் இன்று வரை ஒருவர் கூட இருந்ததில்லை.

கோபி, பவானிசாகர், மொடக்குறிச்சி போன்ற தொகுதிகள் உட்பட ஈரோடு மாவட்டத்தில் எங்கள் சமுதாயத்தினர் பெரும்பாலான அளவில் உள்ளனர். மாநில அளவில், திருச்செங்கோடு, பரமத்தி வேலூர், கரூர், அரவக்குறிச்சி, ஒட்டன்சத்திரம், போன்ற பிற சட்டமன்றத் தொகுதிப் பகுதிகளிலும் பெரும்பான்மையாக உள்ளனர்.

தொகுதி மறு சீரமைப்பில் பவானிசாகர் தொகுதியிலிருந்து கோபி தொகுதிக்கு சில கிராமங்கள் இணைக்கப்பட்டுள்ளது. அதனால் கோபி தொகுதியில் தற்போது எங்கள் சமுதாயம் பெரும்பான்மைச் சமுதாயமாக உள்ளது. எங்கள் சமுதாயத்தினர் கோபி தொகுதியில் எத்தனை பேர் உள்ளனர் என்பதை அறிய கோபித் தொகுதியில் உள்ள எல்லா ஊரிலும் எங்கள் சமுதாய இளைஞர்கள் மூலம் கணக்கெடுப்பு நடத்தினோம். அதன்படி கோபி தொகுதியில் மட்டும் எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த கணக்கெடுத்த வரை 45687 வாக்காளர்கள் உள்ளனர். இது கோபி தொகுதி மொத்த வாக்காளர்களில் எங்கள் சமூகம் சுமார் 25 சதவீதம் வரை உள்ளனர்.

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் கோபி தொகுதியில் எங்களது சமுதாயத்தைச் சேர்ந்த வேட்பாளருக்கு வாய்ப்புக் கிடைத்தால் வெற்றி பெறுவது உறுதி. நாங்களும் அதற்காக அயராது உழைத்து வெற்றி பெறச் செய்வோம்.

எனவே, தலைவர் அவர்கள் கோபி சட்டமன்றத் தொகுதியில் வேட்டுவக்கவுண்டர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வாய்ப்புக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

பொருளாளர் செயலாளர் தலைவர்